**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 31/2021**

**Date : 27.01.2026**

**வா.சா. 1 - ராதாகிருஷ்ணன்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.ஏ படித்துள்ளேன். வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் பதிலுரையில் உள்ள விபரங்கள் அனைத்தும் நான் கொடுத்தது அதனை படித்துப்பார்த்துதான் கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். வழக்கு ஏ பட்டிகை சொத்து 61½ சென்ட் வழக்கு பி பட்டிகை சொத்துசென்ட்என் 8½ என்றால் சரிதான். வழக்கு ஏ பட்டிகை சொத்தான் 61½ சென்ட்டில் தெற்கணைய 8½ சென்ட் பி பட்டிகை சொத்து என்றால் சரியல்ல 61 ½ சென்டிற்கு வடக்கணைய 8½ சென்ட். வழக்கு சி பட்டிகை சொத்து 33 சென்ட் என்றால் சரிதான். வழக்கு ஏ பட்டிகை சொத்தில் வடக்கணைய 33 சென்று வழக்கு சி பட்டிகை சொத்து என்றால் ரோட்டிற்கு வடக்காக 33 சென்ட் வழக்கு சி பட்டிகை சொத்து.

வழக்கு பி மற்றும் சி பட்டிகை செத்திற்கு நடுவே 20 அடி பாதை உள்ளது என்றால் சரிதான். மேற்படி பாதை கிழமேல் பாதை என்றால் சரிதான். மேற்படி 20 அடி கிழமேல் பாதையை தனி சொத்தாக குறிப்பிடப்படவில்லை என்றால் நியாபகம் இல்லை. மேற்படி 20 அடி கிழமேல் பாதைக்கு கிழக்கே தேசியநெடுஞ்சாலை உள்ளது என்றால் சரிதான். மேற்கே அளத்தங்கரை, முருங்கவிளை வரையிலும் தேசிய நெடுஞ்சாலை செல்கிறது என்றால் சரிதான். வழக்கு பி பட்டிகை 8½ சென்ட் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு விலை எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். அதிலிருந்து 2 ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார்

என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சி பட்டிகை சொத்தில் 1ம் பிரதிவாதி வீடு உள்ளது என்றால் சரியல்ல வி. சுப்பிரமணியநாடாரின் வீடு உள்ளது. வழக்கு சி பட்டிகை சொத்தில் 33 சென்ட்டில் எத்தனை வீடு உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 33 சென்ட்டில் 5 வீடு உள்ளது என்றால் நியாபகம் இல்லை.

பிரதிவாதிகள் எதிருரையை தாக்கல் செய்தபின்பு நான் பட்டிகை சொத்தை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. நாளது தேதிவரையிலும் பார்க்கவில்லையா என்றால் பார்க்கவில்லை. மேற்படி 33 சென்ட்டில் நான்கு வீடுகள் உள்ளது மேலும் தென்னைமரங்கள் வைத்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வழக்கு ஏ, பி மற்றும் சி சொத்துக்களில் எல்லைகள் குறிப்பிடப்படவில்லை என்றால் நியாபகம் இல்லை வீடுகள் பற்றி கூறவில்லை. வழக்குரை தாக்கல் செய்வதற்கு முன்பே மேற்படி 5 வீடுகள் மேற்படி 33 சென்ட்டில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பி பட்டிகையில் உள்ள 8½ சென்ட்டில் உள்ள உடைமரங்களை 2ம் பிரதிவாதி வெட்டிமாற்றினார்கள் என்றால் சரியல்ல நான் தான் வெட்டிமாற்றினேன். நான் தாக்கல் செய்துள்ள ரீசர்வே பிளானில் குறிப்பிடப்பட்டுள்ளது அனைத்தும் சரிதான் என்றால் சரிதான்.

ஏ பட்டிகை சொத்திற்கான புதிய புல எண்.867/16, 17, 19 என்றால் சரியல்ல 867/19. வீடு சர்வே எண்.867/16, ரோடு 867/17 மற்றும் வழக்கு ஏ பட்டிகை செத்து 867/19 என்றால் சரியல்ல. வழக்கு சி பட்டிகை செத்து சர்வே எண்.867/16 என்றால் சரிதான். 20 அடி பாதையில் உள்ள ரீசர்வே எண்.867/17 என்றால் சரிதான். மொத்தம் 61½ சென்ட்டில் எங்கேயும் சமாதி இல்லை என்றால் சரியல்ல உண்டு. மேற்படி 61 ½ சென்ட்டில் சமாதிகள் இல்லை அதற்கு தெற்கே தான் சமாதிகள் உள்ளது என்றால் சரியல்ல 61½ சென்டிலும் உள்ளது. யாருடைய சமாதி உள்ளது என்றால் ஞானியார் சமாதி அதற்கு கிழக்கு பக்கம்

வி.சுப்பிரமணயிநாடார் சமாதி, அதற்கு தெற்கு பக்கம் பி. சுப்பிரமணியநாடார் சமாதியும் உள்ளது இன்னும் சில சமாதிகள் உள்ளது. மேற்படி சமாதிகள் அனைத்தும் 61 ½ சென்டிற்கு தெற்கே தான் உள்ளது 61 ½ சென்ட்டிற்குள் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு பி பட்டிகை சொத்தான 8½ சென்ட்டிற்கு தெற்கு தான் ஞானியார் சமாதி உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்தில் அடக்கம் செய்ய அனுமதிகோர வேண்டும் என்று கூறியுள்ளேன் அது முற்றிலும் பொய் என்றால் சரியல்ல.

பின்பு யாரெல்லாம் அடக்கம் செய்தார்கள் என்றால் நியாபகம் இல்லை. என்னிடம் அனுமதி பெற அவசியம் இல்லை என்றால் சரியல்ல 1938 ல் இருந்தே அனுமதி பெற்று தான் அடக்கம் செய்து வருகிறார்கள். அதற்கான ஆவணம் உள்ளதா என்றால் தேவையில்லை. இந்த வழக்கில் வழக்குரையை ரத்து செய்யகோரி IA.No. 2/2021 தாக்கல் செய்யப்பட்ட விபரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி மனுவில் பிரதிவாதிகள் வழக்கு பட்டிகை சொத்து மூன்று கோடி வரும் என்பதாக பிரதிவாதிகள் கூறினார்கள் அவ்வாறு வராது என்று கூறி எனது தரப்பில் இணையவழி ஆவணமான guide line value தாக்கல் செய்தேன் என்றால் அது பற்றி எனக்க நியாபகம் இல்லை. வா.சா.ஆ.2 ல் 8½ சென்ட்க்கு ரூ.92,902/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 எந்த வருடத்திற்கான ஆவணம் என்றால் 2011 ம் ஆண்டு. மேற்படி வா.சா.ஆ.2 க்கு பின்பு தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2011 ம் ஆண்டை விட 2021 ம் ஆண்டு சொத்து மதிப்பு கூடியிருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2021 ம் ஆண்டு சொத்து மதிப்பு 11 ஆயிரம் என்று கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொத்தின் மதிப்பை குறைத்து அதிகார வரம்பிற்குள் வராத நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் ஆகையால் வழக்கு

நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11 ஆவணம் பாகப்பிரிவினை ஆவணம் அல்ல கிரய ஆவணம் என்றால் சரியல்ல. அ.வ.எண்.10/2019 வழக்கு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ரீசர்வே எண்.867/19 குறித்த வழக்கு என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எல்கை கிழக்கு மற்றும் வடக்கு ரோடு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் உட்பிரிவு பின்பு செய்யப்பட்டது. வழக்கை தாக்கல் செய்ய எவ்வித மூலகாரணமும் கிடையாது வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**